இணைப்பு—I.

[183 ஆம் பக்கத்தில் 281 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

கும்பகோணம் அரசு மருத்துவமனையில், உதவி மருத்துவர் திரு. திருநாவுக்கரசு 5—1—1973 அன்று கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். திரு. இ. எஸ். ராஜகோபால் என்ற வட்ட காவல் ஆய்வாளர் மாலை ஆறு மணி அளவில் கும்பகோணம் மருத்துவ மனைக்கு வந்து மருத்துவர் திரு. திருநாவுக்கரசிடம் தான் கொண்டுவந்த டி.ரெடிசால் என்னும் ஊசி மருந்தை ஊசி மூலம் தனக்கு போடும்படி கேட்டார்.

மாலை ஆறு மணிக்கு மருத்துவர் திரு. திருநாவுக்கரசு, டி. ரெடிசால் என்னும் மருந்தில் ஒரு சி.சி. அளவு திரு. இ. எஸ். இராஜகோபால் அவர்களுக்கு ஊசி மூலம் செலுத்தினர்.

ஆனால் மாலை 6.20 மணியளவில் ஊசி போட்டதின் எதிர் விளைவு உண்டாகி அதனை நிவர்த்திக்க அனைத்து முயற்சிகள் செய்தும் மாலை 6.40 மணிக்கு அவர் இறந்துவிட்டார்.

இணைப்பு—II.

[242 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பு.

1. கொள்முதல்.

1972 ஆம் ஆண்டில் வணிகர்களிடம் "லெவி" (விதிப்புக் கொள்முதல்) முறையில் நெல், அரிசி கொள்முதல் செய்யும் திட்டம், தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய நான்கு உபரி மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. தொடக்கத்தில் 25 சத வீதமாக இருந்த "லெவி" வீதம் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களைப் பொறுத்தமட்டில்,